ISSN : 2456-821X Vol. 5 Issue 2 Dec 2021

புதிய அவையம்

## சங்க இலக்கியத்தில் இசை மருத்துவம்

*முனைவர் க. மோகன்காந்தி, தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்,*

தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்

### முன்னுரை

இவ்வுலகில் உயிரினங்கள் என்று தோன்றினவோ, அன்றே நோயும் பிறந்திருக்கும். சிறு உயிரினங்கள், மனிதன், விலங்குகள் என அனைத்து உயிர்களும் நோய்வாய்ப்படுகின்றன. எனவே தான் மருத்துவம் சார்ந்த பல பழமொழிகள் தமிழ்மொழியில் வழங்கலாகின்றன. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்", "ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை வைத்தியன்", "நாடியை அறிந்தால் நமனை அறியலாம்" உள்ளிட்ட முதுமொழிகள் தோன்றின.

ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ளும் போது எப்படி இருக்கிறீர்கள்? நன்றாக இருக்கிறீர்களா? சௌக்கியமா? உடம்பு எப்படி இருக்கிறது? உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள் போன்ற உரையாடல்கள் நோக்கத்தக்கன. இவை மருத்துவத்தோடு தொடர்புடையன.

சங்க காலப் புலவர்கள் அரசர்களைக் காணும் போதும், தலைவி, தலைவனை வாழ்த்தும் போதும் நோயில்லாமல் வாழ்க என்று வாழ்த்துவது பெரு வழக்காக இருந்துள்ளது.

"நோயிலை ஆகுமதி பெரும" - புறம் 209 : 14

"நோயில ராநின் புதல்வர்" புறம் - 196 - 10

“நோயில ராகநங் காதலர்” அகம் - **227 - 13**

போன்ற சங்கப் பாடலடிகள் நோயில்லாமல் வாழ வேண்டும் என்பதை வெளிப்படுத்துகின்றன.

## நோயும் பிணியும்

சங்க காலம் தொட்டே தமிழகம் மருத்துவத்துறையில் தனித்துவம் பெற்று இருந்திருக்கிறது. பல நோய்கள் பற்றிய குறிப்புகள் பழந்தமிழ் நூல்களில் உள்ளன. குட்ட நோய், வயா நோய், யானைத் தீ நோய் (மணிமேகலை), சூலை நோய் (திருநாவுகரசர் உற்ற நோய்), வெப்பு நோய் போன்ற பல நோய்கள் பற்றியக் குறிப்புகள் தமிழ் இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. நோய், பிணி என்ற இரு பெயர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

நோய் என்பது முழுமையாக உள்ள அரிசி உடைந்து போகும் போது “நொய்” என்றாற் போல, உடல் நலத்தோடு இருக்கும் ஒருவன், உடைந்து போகும் போது நோய்வாய்ப்படுகிறான். அதாவது தன் பலத்தை இழக்கும் போது நோயாளி ஆகிறான். எனவே முழுமையான அரிசி = பலம் பொருந்திய மனிதன், நொய் அரிசி = நோயாளி. எனவே நொய் என்ற அடிச் சொல்லில் இருந்து நோய் என்னும் சொல் பிறந்திருக்க வேண்டும்.

“பிணி” என்ற சொல் மனிதனோடு பிணைந்திருப்பதை வெளிப்படுத்துகிறது. “பசிப்பிணி” என்ற வழக்குள்ளது. மனிதனை எப்பொழுதும் பிணித்திருப்பது பசி. உணவு உண்டவுடன் பசிநோய்த் தீர்கிறது. மீண்டும் மீண்டும் அது மனிதனை அகலாது இருப்பதால் பசியைப் பிணி என்றனர் போலும்.

“பசிப்பிணி மருத்துவன்” - புறம் - **173 - 11-12**

“பசிப்பிணி என்னும் பாவி” மணிமேகலை

போன்ற சொற்றொடர்கள் கவனிக்கத்தக்கன.

## இசை மருத்துவம்

மருத்துவ முறைகளில் ஒரு வகை மருத்துவம் இசை மருத்துவம். இன்றையச் சூழலில் மேற்கத்திய நாட்டினர் மத்தியில் இசை மூலம் நோயைக் குணப்படுத்த முடியும் என்ற மருத்துவக் கொள்கைப் பரவலாகக் காணப்படுகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே மலைபடுகடாம் என்ற சங்க இலக்கிய நூல், தன் கணவன் மார்பில் புலி பாய்ந்து கொடிய புண்ணை ஏற்படுத்தி விட, அப்புண்ணை மனைவி, இசைப்பாடல் மூலம் ஆற்றுவித்ததாக அந்நூல் கூறுகிறது. மலைபடுகடாம் நவிரமலையில் (இன்றைய சவ்வாதுமலை) கேட்ட 19 வகையையான ஓசைகளைக் குறிப்பிடும் போது, புலியால் தாக்குண்டு அழுத குறவனின் புண்ணை ஆற்றக் குறப்பெண் பாடிய பாட்டொலியும் அடங்கும். இன்றைக்கும் சவ்வாதுமலையில் புலியூர், புலிமடு, புலிக்குகை போன்ற பெயர்கள் வழக்கில் உள்ளன. எனவே பழங்காலத்தில் மிகுதியான புலிகள் இம்மலையில் வாழ்ந்திருக்க வேண்டும் என்று கருத இடமுண்டு. மேலும் சவ்வாதுமலைப் பழங்குடி மக்கள் இன்றைக்கும் நோய்வாய்ப்பட்டவர்கள், பெருங்காயத்தால் அழுவோருக்கு மந்திரப் பாடல்களை இசையோடு பாடி நோயைக் குணப்படுத்த முயல்வது நோக்கத்தக்கது. மலை நிலத்தில் வாழ்ந்த குறப் பெண்ணுக்கும் இந்த இசை மருத்துவம் தெரிந்திருந்தது என்பது தமிழரின் மருத்துவம் பற்றிய உச்சக்கட்டப் புரிதல் என்று அறியலாம். அப்பாடலடிகள் வருமாறு,

“கொடுவரி பாய்ந்தெனக் கொழுநர் மார்பி
னெடுவசி விழுப்புண் டணிமார் காப்பென
வறல்வாழ் கூந்தற் கொடிச்சியர் பாட”

- மலைபடுகடாம் - 305 - 307

என்னும் பாடலடிகள் உறுதி செய்கின்றன.

மேலும் போர்க்களத்தில் விழுப்புண்பட்ட வீரன் ஒருவனுக்கு வீட்டில் மருத்துவம் செய்கின்றனர். அப்போது வீட்டின் இறவாணத்தில் (வாசற்படி) இரவ மரத்தின் தழையையும், வேப்பிலையையும் கட்டியுள்ளனர். “யாழ்” என்னும் இசைக்கருவியை இசைத்துள்ளனர். வெண் சிறுகடுகைத் தூவியுள்ளனர்.

நறுமணம் கமழும் அகில் புகையைப் புகைத்துள்ளனர். மேலும் காஞ்சிப் பண்ணைப் பாடி, ஆம்பல் குழலை ஊதி, மணி அடித்து இசையை எழுப்பிப் புண்ணை ஆற்றியுள்ளனர்.

“தீங்கனி யிரவமெடு வேம்புமனைச் செரீஇ

வாங்குமரு பியாழொடு பல்லியங் கறங்கக்

கைபயப் பெயர்த்து மைஇழு திழுகி

ஐயவி சிதறி ஆம்பல் ஊதி

இசைமணி யெறிந்து காஞ்சி பாடி

நெடுநகர் வரைப்பிற் கடிநறை புகைஇக்

காக்கம் வம்மோ காதலந் தோழி

வேந்துறு விழுமம் தாங்கிய

பூம்பொறிக் கழற்கா னெடுந்தகை புண்ணே”

- புறம் **281 : 1 - 9**

இங்கு இரவம் தழை, வேப்பிலை, வெண்சிறுகடுகு, அகில் புகை ஆகியவை கிருமிநாசினிகளாகத் தமிழர் பயன்படுத்தியுள்ளனர். மேலும் இசைக்கருவிகள், மணியோசை, குரலிசையாகப் பாடல்பாடுதல் என இசையின் மூலம் காயம்பட்டப் புண்ணைப் பழந்தமிழர் ஆற்றியிருக்கின்றனர்.

மேலும் இசைப்பாடல்கள் மூலமாக யானையையே கட்டுப்படுத்த முடியும் என்பதை அகநானூறு **102** ஆம் பாடல் வெளிப்படுத்துகிறது. இங்கும் குறிஞ்சி நிலப்பெண்னான, குறத்தி இசை மீட்டி யானையைத் தினைப்பயிரை உண்ணாமல் தினைபுனத்தைப் பாதுகாத்தது அறியத்தக்கது. மேலும் இளமைப் பொருந்திய ஆண் யானையை (மழகளிறு) இசைக் கட்டுப்படுத்தியது என்பது தமிழரின் இசைக்கலைப் புரிதலின் உச்சமாகும். அப்பாடலடிகள் பின்வருமாறு,

“ஒலியல் வார்மயிர் உளரினள் கொடிச்சி

பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக்

குரலும் கொள்ளாது நிலையிலும் பெயராது

படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென

மறம்புகல் மழகளி றுறங்கும் நாடன்”

அகம் **102 : 5 - 9**

என்னும் பாடலடிகள் இசை விலங்குகளையும் தன்வயப்படுத்தும் என்ற அறிவியல் உண்மையை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்ப் பெருங்குடி அறிந்திருந்ததை வெளிப்படுத்துகிறது.

கொடிய யானைகளை மட்டுமின்றி மனிதரில் கொடியோரான ஆறலைக் கள்வர்களையும் இசைத் தன்வயப்படுத்தும் ஆற்றல் உடையது. வழிப்போக்கரைக் கொன்று அவர்களின் கைப்பொருளைக் களவாடும். ஆறலைக் கள்வரைக் கூட பொருநர்கள் மீட்டிய இசை, மெய்மறக்கச் செய்தது என்று பொருநர் ஆற்றுப்படை **20 - 22** அடிகள் கூறுகிறது.

## முடிவுரை

தமிழ்ச் சமூகத்தில் பிறப்பு முதல் இறப்பு வரை இசைப் பாடல்கள் முதன்மைப் பெறுகின்றன. ஒரு தாய் பாடும் தாலாட்டில் குழந்தைகள் உறங்குவது இசையின் மகத்துவமே. இசைப்பாடலைக் கேட்டுக் கொண்டிருக்கும் போது பால் அதிகமாக பசுவின் மடியில் சுரக்கும் என்ற கூற்று இங்கு நினைக்கத்தக்கது.

இராமாயணத்தில், கயிலை மலையை இராவணன் தூக்க முற்படும் போது, சிவபெருமான் மலையை அழுத்த, இராவணனின் கைகள் மலையின் அடியில் சிக்கிக் கொள்கின்றன. அப்போது இராவணன் சாம கானத்தைப் பாட, மெய்மறந்து சிவபெருமான் கால்களைத் தூக்க, இராவணன் பிழைப்பதற்கு இசையே துணையாக நிற்கிறது.

அப்பர் தம் தேவாரத்தில் தமிழையும் இசையையும் சேர்த்து இறைவனுக்குப் பாமாலைச் சூட்டுகிறார். எனவே கடவுளையும் தன்வயப்படுத்தும் ஆற்றல் இசைக்கு உண்டு என்பதை அறியலாம்.

பண்டைய தமிழ் இசை, மனதை இதமாக்கி, நோயைக் குணப்படுத்திய செய்திகளைச் சங்கத்தமிழரின் இசை மருத்துவக் குறிப்புகள் மூலம் அறியலாம். தமிழரின் இசைக் குறிப்புகள் இன்றைக்கும் மனித குலத்திற்கு முன்னோடி எனில் குற்றமன்று.

***துணை நின்ற நூல்கள்***


1. *அகநானூறு, வேங்கடசாமி நாட்டார் ந.மு, வேங்கடாசலம் பிள்ளை. ரா , பதவுரை, விளக்கவுரை, கழக வெளியீடு, சென்னை, 2007*
2. *பத்துப்பாட்டு, சோமசுந்தரனார் பொ.வே, உரை, கழக வெளியீடு, சென்னை, 2017*
3. *புறநானூறு, சோமசுந்தரனார் பொ.வே, உரை, கழக வெளியீடு, சென்னை, 2017*